## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 18.11.2025

அசல் வழக்கு எண். 408/2023

வா.சா.1 – விவேக், த/பெ. மகேந்திரன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

வாதி வெங்கடதாசன் என்பவர் தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவர் வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில் நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். வழக்கு விவரம் தெரியும் என்று சொன்னால் சரிதான். வெங்கடதாசன் எப்படி தெரியும் என்றால் என்னுடைய குடும்ப நண்பர் ஆவார். வெங்கடதாசன் எத்தனை ஆண்டுகளாக சென்னையில் வசிக்கிறார் என்றால் சுமார் 25 ஆண்டுகளாக சென்னையில் வசிக்கிறார். வா.சா.ஆ1 நீங்கள் தாக்கல் செய்த கடன் ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான். அதில் நீங்கள் கையொப்பம் போட்டீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ1ல் பணம் வாங்கும் பொழுது நீங்கள் இல்லை என்றால் சரிதான். எந்த நேரத்தில் பணம் கொடுத்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் மதியத்துக்கு மேல் பணம் கொடுத்தார். மதியம் என்றால் எப்பொழுது என்றால் சுமார் 12 மணி முதல் 2 மணிக்கு உள்ளாக இருக்கும். பணம் கொடுக்கும் போது யார் இருந்தார்கள் எவர் இருந்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் வெங்கடேசன் யார் யார் இருந்தார்கள் என்று சொன்னார். வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டார்கள் தெரியுமா என்றால் இரண்டு சதவீத வட்டி போட்டார்கள். வட்டி பணம் 2018 வரை கொடுத்ததாக சொல்கிறீர்கள் என்றால் சரிதான். வட்டி பணம் யாரிடம் கொடுத்தார் என்றால் வெங்கடதாசன் என்பவரிடம் கொடுத்தார். உங்களிடம் பணம்

கொடுக்கவில்லை என்றால் எவ்வளவு கொடுத்தார் என்ன கொடுத்தார் என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் அவர் என்னிடம் சொன்னார், ஆனால் எனக்கு தெரியாது. எந்த தேதியில் வட்டி கொடுத்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கும் பொழுது நீங்கள் உடன் இருந்தீர்களா என்றால் இல்லை. உங்களுக்கு சண்முகம் என்பவர் தெரியுமா என்றால் தெரியும். அவர் உங்களுடன் தற்போது வந்துள்ளார் என்றால் சரிதான். வெங்கடதாசன் மற்றும் சண்முகம் என்பவர் பைனான்ஸ் பிசினஸ் செய்து வருகிறார்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சண்முகம் சென்னையில் இரண்டு வழக்கும் காஞ்சிபுரத்தில் இரண்டு வழக்கம் பிரதிவாதி ராஜா மீது போட்டு உள்ளார் தெரியுமா என்றால் எனக்கு எந்த வழக்கு பற்றி மட்டுமே தெரியும் மற்றபடி தெரியாது. நீங்கள் இந்த வழக்கில் சண்முகம் சொல்லித்தான் வந்தீர்கள் என்றால் வெங்கடதாசன் சொல்லி தான் வந்தேன். நீங்கள் 21.12.2017 அன்று பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் அதே தேதி அன்று பிரதிவாதி, வாதிக்கு ரூபாய் 50,000/–க்கு அடமானம் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தார் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த அடமான பத்திரம் செய்யாறில் எழுதப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது அந்த தேதியில் இருவரும் செய்யாறில் இருந்தார்கள் தெரியுமா என்றால் தெரியாது. டிசம்பர் 2018 வரை வட்டி கொடுத்ததாக சொல்கிறீர்கள் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த கடன் பத்திரம் கடந்த 2017ஆம் ஆண்டு எழுதப்பட்டது நீங்கள் காலம் தாழ்த்தி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. கொரோனா காலகட்டம் என்று மனுவில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சொல்லவில்லை. பிரதிவாதி குடும்பத்தில் பாகப்பிரிவினை பிரச்சனைக்காக ரூபாய் 50,000/–

மட்டுமே கடன் கேட்டார் என்றால் சரியில்லை. அப்பொழுது வாதி ரூபாய் 4,50,000/- க்கு காசோலை கொடுப்பதாகவும் அதில் நீங்கள் 50,000/- எடுத்துக்கொண்டு மீதி 4 லட்சம் ரூபாய் என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதி கேட்டுக் கொண்டதாகவும் ஆனால் நீங்கள் வழக்குக்காக தற்போது மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வாதி கோரியவாறு ரூபாய் 4 லட்சம் திரும்ப ஒப்படைத்து விட்டார் என்றால் சரியில்லை. ஆகவே ரூபாய் 50,000/- திற்கு பிரதிவாதி, வாதிக்கு அடமான கடன் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியில்லை. ரூபாய் 50,000/-ற்கு அடமானம் என்று ஒப்புக்கொண்டதால்தான் ரூபாய் 50,000/- மட்டுமே வாங்கினார் என்றால் சரியில்லை. பிரதிவாதி வாதியை அணுகி ரூபாய் 50,000/-ஐ கொடுப்பதாகவும் அடமானத்தை ரத்து செய்து கொடுக்கும்படியும் கேட்ட பொழுது வாதி 5 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்று கூறியதால் பிரதிவாதி வாதிக்கு எதிராக செய்யார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வாக்கு மூலத்தில் வாதியின் முகவரி நீங்கள் சொல்லி உள்ளது சரிதான் என்றால் சரிதான் தற்பொழுது அவர் வேறு முகவரியில் வசிக்கிறார். நீங்கள் கூறுவது போல் அவர் ரூபாய் 4,50,000/- வாங்கவில்லை நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram